


மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

சேலம் மாவட்டம்

கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம்

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம்,சிங்கிரிபட்டி கிராமம், சர்வே.எண்: 224/1, 231/6B, 231/7C, 231/8C, 231/9, 231/10, 232/3, 232/4-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான சாலை அமைப்பு வரைபடம் (திட்டமில்லாத பகுதி)

அளவு : 1:800 (அ) 1:66"0"

கோப்பு எண் : SLM/9NL49QVV/2143/2022

இணையதள விண்ணப்பம் எண்: 9NL49QVV

குறிப்பு:

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு : 6.49 ஏக்கர் (அ) 26247.00 ச.மீ.

உத்தேச மனைப்பிரிவு சாலைகள் மற்றும் மூலைமுடக்குகளின் பரப்பு :7858.26 ச.மீ

மீதமுள்ள மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு :18388.74 ச.மீ

ஒதுக்கப்பட்ட (EWS) மனைகளின் பரப்பளவு :1851.24 ச.மீ(10.07%)

ஒதுக்கப்பட்ட (EWS) மனைகளின் எண்கள் : 39எண்கள்

(11, 12, 36, 37, 38, 40, 41, 58 to 65, 71,73 to 95)

மனுதாரர் உபயோக பரப்பளவு : 4217.13 ச.மீ

மனுதாரர் உபயோக எண்கள் : 4

கோரிய மனைகளின் எண்ணிக்கை : 95

ஒதுக்கிய மனைகளின் எண்ணிக்கை : 95

மனைப்பிரிவு எல்லை.........................................................................

மனைப்பிரிவு சாலை மற்றும் மூலைமுடக்கு..................................

நிலையில் உள்ள சாலை...............................................................

பொது ஒதுக்கீடுகள் (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை: :

உள்ளாட்சியிடம் மனுதாரர் தானமாக ஒப்படைக்கப்பட்டவை:

உத்தேச மனைப்பிரிவு சாலைகள் மற்றும் மூலைமுடக்குகளின் பரப்பு : 7858.26 ச.மீ

உத்தேச மனைப்பிரிவு பூங்காவின் பரப்பளவு : 1868.75(10.16%)ச.மீ

பொது உபயோகம் :

TNCD&BR-2019, 47(8)-ன் படி மனுதாரர் தானமாக ஒப்படைக்கப்பட்டவை:

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பொது உபயோக மனை பரப்பு

உள்ளாட்சிக்கு ஒதுக்கப்பட்ட (PP1) மனை பரப்பு : 102.48 ச.மீ (0.56%)

(TANGEDCO) -விற்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பொது உபயோக மனை பரப்பு

(TANGEDCO) -விற்கு ஒப்படைக்கப்பட்ட (PP1) மனை பரப்பு : 100.63 ச.மீ (0.55%)

மூலை முடக்கு : 12.00மீ அகலம் சாலைவரை 1.50 x 1.50மீ விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்:

1. அரசாணை எண் -18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள் 04-02-2019 -ன் படி நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.
2. அரசாணை எண் -16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள் 31-01-2020-ன் படி நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.
3. அரசாணை எண். 181-ன் படி விடு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 09.12.2020 -ன் படி நிபந்தனைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.
4. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும். உள்ளாட்சி உறுதி செய்ய வேண்டும்.
5. நிலஉரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால், மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதில் ஏதேனும் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர்-ஆணையர் அவர்களால் இரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர்-ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி-திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம்- குத்தகை பத்திரம்- பட்டா- தானப்பத்திரம்- பொது அதிகார பத்திரம் மேலும் பல விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமைக்கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
8. நீர் நிலைகள் பாதிக்கப்படாத வண்ணம் கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.
9. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படத்தினை எவ்வித மாற்றமும். விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' X 4' அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
10. நீதிமன்ற வழக்குகள் ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் அனுமதி செல்லதக்கதல்ல,
11. இம்மனைப்பிரிவிலிருந்து அருகில் உள்ள இடத்திற்கு செல்லவும் வரைபடத்தில் கான்பிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு சாலைகளின் குறுக்கே மனைப்பிரிவு சாலையின் போக்கினை பாதிக்கும் வகையில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டிருப்பின் அதனை அகற்றப்பட வேண்டும்.
12. உத்தேச மனைப்பிரிவு சாலைகளுக்கு மனுதாரரால் தார் சாலை அமைக்கப்பட்டு (BDO/UE) வட்டார வளர்ச்சி அலுவலர் / யூனியன் பொறியாளர் அவர்களிடம் தரம் குறித்து தகுதிச்சான்று பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

APPROVAL NO: SWP/ DTCP /SALEM/LAYOUT NO:14/2023

உதவிஇயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
சேலம் மாவட்டம்

Signature Not Verified
Signed by: Assistant Director
Location:Salem
Date: 2023.01.06